செ.வெ.எண்: 544 27/8/09

# செய்தி வெளியீடு – 27.8.2009

தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை விரிவாக ஆய்வு செய்து ஆவன செய்வது தொடர்பாக நீதியரசர் திரு.கே.பி.சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, கருத்துகளை நேரடியாகக் கேட்டறிந்து, பரிந்துரை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதற்கு முன்பாக, மரியாதை நிமித்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை குழுத்தலைவர் நீதியரசர் திரு.கே.பி. சிவசுப்பிரமணியம் அவர்களும், குழு உறுப்பினர்கள் திரு.பி.ராஜேந்திரன், ஐ.பி.எஸ். (ஓய்வு), சட்டத்துறை செயலாளர் திரு.தீனதயாளன், கைத்தறித்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆர்.இராஜகோபால், ஐ.ஏ.எஸ்., வேளாண்மைத்துறை செயலாளர் திரு.நந்தகிஷோர், ஐ.ஏ.எஸ்., வேளாண் துறை ஆணையாளர் திரு.கோசலராமன், ஐ.ஏ.எஸ். மற்றும் குழுவின் உறுப்பினர்–செயலர் திரு.த.சீனிவாசன் ஆகியோரும் தலைமைச் செயலகத்தில் இன்று (27.8.2009) சந்தித்தனர். இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், ஐ.ஏ.எஸ். அவர்களும் உடன் இருந்தார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை